JL
L:5m211,N25VC
N26.1.9
210152

Registered No. M. 2C84.

31 OCT 1930

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2.    வெளிநாடு சந்தா ரூ 3.

புத்தகம் 1    குரோதன வருஷ மாசிமீ    பகுதி 9

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| சிகித்ஸை :— | பத்திராதிபர் | ... 1 |
| அம்புதோடுக்கின்றது :— | | ... 11 |
| வைத்திய உலகம் :— | | ... 15 |
| கோயமுத்தூர் ஜில்லா முதலாவது ஆயுர்வேத கான்பரென்ஸ் உடுமலைப்பேட்டை | | ... 16 |
| ஆகாரம் :— | | ... 19 |
| வைத்திய சாரம் :— | பண்டிட் நாராயண ஐயங்கார் | ... 116 |


Pandit, S. NARAYANA IYENGAR,
**Editor and Publisher.**

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

**Vol. 1    February 1926    No. 9**

..d at the "Vivekalanu Press," Karur.

# Talismans and Charms.

**For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.**

| | Rs. | As. |
|---|---|---|
| For Honour, Riches, Learning and Greatness ... | 7 | 8 |
| For Health, Physical Strength, etc. ... | 7 | 8 |
| For Power of Eloquence, Speeches, etc. ... | 7 | 8 |
| For Success in any Undertaking or Litigation, etc. | 10 | 0 |
| For Success in Sport, Racing, Cards, Games of Chance, etc. ... ... | 7 | 8 |
| For Success in Spiritual and Religious Life ... | 10 | 0 |
| For Success in Trade and Business ... | 10 | 0 |
| For Men's Love to Women ... | 7 | 8 |
| For Women's Love to Men ... | 10 | 0 |
| For Love of Opposite Sex, Attractive Power ... | 7 | 8 |
| For Agricultural Prosperity, Farming, Good Crops etc. | 7 | 8 |
| Farming, Good Crops, etc. ... | 7 | 8 |
| For Success in Mining Plumbago, etc. ... | 100 | 0 |
| For Success in Gemming. ... | 225 | 0 |
| Rabbi Solomon's Special Talisman for every success | 15 | 0 |
| Specially valued and worn by every successful Hebrew, 2nd quality ... | 21 | 0 |
| 1st quality ... | 30 | 0 |

Note :— A money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15 two Rs. 25, three Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance. No V. P. P.

Apply to:- **D. A. RAM DUTH, Astrologer,**
No. 30 & 55 (V. C.) Cheku Street, Colombo. (Ceylon).


## வைத்திய சந்திரிகாவைப்பற்றி

### சில பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

தாய்நாடு கூறுவதின் சுருக்கமாவது:— வைத்திய சந்திரிகாவில் அரிய விஷயங்கள் பல மலிந்து கிடக்கின்றன. ஆசிரியரின் அரியதிறமை இவ்வியாசங்கள் மூலம் நன்கு தெரியவருகின்றது. ஆசிரியர் அவர்கள் ஆயுர்வேத வைத்தியத்தில் நிபுணரென்பதையும் பொது விஷயங்களில் மிக்கசிரத்தை வாய்ந்துள்ளவரென்பதையும் இவ்வியாசங்களும் பத்திரிகையும் நன்கெடுத்து காட்டுகின்றன. வைத்திய சந்திரிகா ஆயுர்வேத வைத்தியத்தின் மகிமையை நன்கு விளக்கிக்காட்ட முற்பட்டிருக்கிறது. கற்றவர்யாவரும் வாசிக்கவேண்டியவியாசங்கள் இவைகளாகும். தமிழர் இப்பத்திரிகையை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். குரோதன-௵ ஆனி-௴ 23-௳

# சிகித்சை.

இவ்விஷயத்தை சென்றசந்திரிகையிலும் ஆராய்ந்தோம் சுதேசமுறைகளில் காய்ச்சல்முதலிய ஒவ்வொருவியாதிகளிலும் உபயோகிக்கும் ஔஷதங்கள் இயற்கையைபலப்படுத்தி வியாதியைபரிகரிக்கின்றது. ஆகையால் சுதேசமருந்துகள் முழுவதும் இயற்கைக்கு ஏற்றதாக இருப்பதால் இயற்கை வலிமை குன்றாமலே வியாதியை நிவர்த்திக்கின்றன. உதாரணமாக காய்ச்சலில் கோரைக்கிழங்கு, பர்பாடகம் முதலியவஸ்துக்கள் பித்தப்பை முதலியவைகளுக்கு இயற்கைவலிமையை அதிகரிக்கச்செய்து அதன் மூலமாக காய்ச்சலையும் விலக்குகின்றன. நிலவேம்பு என்றசரக்கு காய்ச்சலை நிவர்த்திப்பதுடன் காய்ச்சல் தணிந்தபிறகுகூட உபயோகித்தால் good appetizer நல்லதீபனகாரி என்று ஆங்கிலவைத்திய நிபுணர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஒருமருந்தை இயற்கைக்கு ஏற்றதா அல்லவாஎன்பதை ஒவ்வொருவரும்சில அடையாளங்களால் அறிந்துகொள்ளக்கூடும். சரீரத்தின் இயற்கை காரியங்கள் (அதாவது மலஜலம்போகுதல், நாடிநடை, மூச்சு, வியர்வை முதலியவைகள்) இயற்கைகுணங்கள் (அதாவது பசி, தாகம், உஷ்ணம், சீதம், முதலியவை) ஆகிய இவைகள் பாதிக்கப்படாமலும் அபிவிருத்தியடையும்படி செய்வதுடன் ஏற்பட்ட அபிவிருத்தி மருந்துகளை நிறுத்தியபிறகும் க்ஷிணிக்காமலுமிருக்குமாகில் அவை இயற்கைக்கு ஏற்றதென அனேகமாகச்சொல்லலாம். இதற்கு விபரீதமானவை இயற்கைக்கு விருத்தமென கூசாமல் கூறலாம். இயற்கைபலத்தை விருத்திசெய்யும் முதல் வகுப்பு மருந்துகளை ஆங்கிலத்தில் டானிக்என கூறுகின்றனர். இயற்கைபலத்தை விருத்திசெய்யாமல் தத்கால சாந்தியாக இயற்கையைத்தூண்டும் ஔஷதங்களுக்கு stimulant அல்லது தூண்டும்மருந்துகளென்றும் மற்றும் பலவிதமாகவும் அழைக்கின்றனர். சுதேசமுறைகளில் வியாதிகளுக்குச்சொல்லப்பட்ட எந்த ஔஷதமும் பிந்திய வகுப்பைச்சேர்ந்ததாக இருக்கவில்லையென்பது அனுபவத்தில்யாருமறியலாம். இயற்கையைதூண்டுவதைவிட அதைபலப்படுத்துவதுதான் நல்லவழி என்பதை நம்பெரியோர்கள் உணர்ந்து இயற்கையை நன்றாக பலப்படுத்தும் மருந்துகளுக்கு ரஸாயனங்களென்றும் கல்பமூலிகைகளென்றும் பெயர் கொடுத்து வெகுவிஸ்தாரமாக அதன்பெருமையை பல அத்தியாயங்களால் வர்ணித்திருக்கின்றனர். மற்றமுறைகளில்

இயற்கையை கவனியாமல் வியாதிகளைத்தணிப்பதுமாத்திரம் மூலக்கொள்கையாக இருக்கின்றது. ஆகவே சிலசமயங்களில் இயற்கை மிகவும் பாதிக்கப்பட்டு பலஹீனத்தையடைவதாக பலமேதாவிகளும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

## சிகித்சை

சுதேச மருந்துகளுக்கு இந்தபெருமை இருந்தபோதிலும் வியாதியைவிலக்க மருந்து அவசியமா? மருந்து இல்லாமலே வியாதி தணிவதில்லையா? மிகஜாக்கிரதையாக மருந்துகளை காலாகாலத்தில் உபயோகித்தும் மரணம் நேருவதில்லையா? இக்காரணங்களால் வியாதிக்கும் மருந்துக்கும் சம்பந்தமில்லையென ஏற்படவில்லையா? டாக்டர் கூனியவர்களும் இயற்கை பலத்தாலேயே வியாதிகளை ஜயிக்கவழிசொல்லவில்லையாஎன இதுபோன்ற பலகேள்விகள் உதிக்கின்றன. டாக்டர் கூனியவர்களின் மதத்தை முதலில் ஆராய்வோம். அவர் சொல்லுவதாவது —சரீரம் ஆகாரம் முதலியவைகளால் முதலில் கெடுகின்றது. சர்வ வியாதிகளுக்கும் காரணமாக ஒரு தோஷம் சரீரத்தில் உத்பத்தியாகின்றது. ஸர்வவியாதிகளுக்கும் காரணம் ஒன்றே (Unity of dicease) அத்தோஷம் சரீரத்தில் பரவும்விதத்தை யனுசரித்தே வியாதிகள் பலவிதங்களாக வெளிக்குத்தோன்றுகின்றன. வெளியில்தோன்றும் வேஷங்களுக்காக வெவ்வேறுமருந்து வேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது. எல்லாவியாதிகளுக்கும் காரணம் ஒன்றானதால் சிகித்சையும் ஒரேவிதம்தான். வெளியிலிருக்கும் பூச்சிபுழுக்கள் சரீரத்தில்நுழைந்தாலும் முந்திசொல்லியதோஷம் அதிகமாகியே வியாதிவருவதால் பூச்சி புழுக்களைப்பற்றி நாம் அதிகம் கவனித்துக்கொள்ளவேண்டியது அனாவசியம். இவ்விதம் தோன்றும்வியாதிகள் உண்மையில் வியாதியாகமாட்டா. சரீரத்திலிருக்கும் அந்த கெட்டதோஷம் வியாதியென்ற வேஷத்துடன் வெளியேறும்படி இயற்கைசெய்கின்றது. ஆதலால் வியாதிகளை ஓர் சுபசகுனமாகவே கருதவேண்டும். அப்பொழுது நாம்செய்யவேண்டிய வேலையென்னவென்றால் இயற்கையின் பலத்தை விருத்திசெய்வதே. இயற்கை தன் சத்துருவாகிய அந்ததோஷத்தை வெளியேற்றும்பொழுது இயற்கைக்கு நாம் ஒத்தாசை செய்தால் இயற்கை சுலபமாக சத்துருவை ஜயிக்க வியலும் உதாரணமாக காய்ச்சல்தோன்றினால் தோஷம் காய்ச்சல் ரூபமாக வெளியேற்றப்படுவதால் அவ்விடத்தில் இயற்கைக்கு நாம் உதவிபுரியவேண்டும். இயற்கைக்கு உதவி புரிதலாவது-சரீரத்திலிருக்கும் கெட்ட அம்சங்கள் வெளியேறுவதற்காக ஈசனால் அமைக்கப்பட்டுள்ள வழிகள் அதாவது மூத்திரதுவாரம், மலதுவாரம், மயிர்கண்கள் இவைகள் அடைபடாமல் செய்தல். வியாதி



தோன்றும் காலங்களில் மயிர்கண்கள் அடைபடுகின்றன. வியர்வை உண்டாவதில்லை. மயிர்கண்கள் விரிந்து வியர்வை மூலமாக சரீரதோஷம் வெளியேறுவது இயற்கை. இந்தசமயத்தில் இந்த இயற்கையை நாம் பலப்படுத்த வேண்டியது அவசியம். கொய்னா முதலிய மருந்துகள் காய்ச்சலைஅடக்குகின்றன. இயற்கைக்கு ஒத்தாசைசெய்வதில்லை காய்ச்சல் விசிரியடித்துவிட்டால் சரீரத்திலிருக்கும் கெட்டதோஷம் முழுவதும் விலகிவிடும். காய்ச்சலாவது தோஷமே. உள்ளிருக்கும் தோஷமே காய்ச்சல் என்ற பெயருடன் வெளிவருகின்றது. ஆகையால் காய்ச்சல் என்றால் தோஷமென்றுதான் கொள்ளவேண்டும். கொய்னா முதலிய மருந்துகள் காய்ச்சலை அடக்கினால் அப்பொழுது வெளியேறும் தோஷத்தை வெளியேற வொட்டாமல் தடுத்து உள்ளே இருக்கவைப்பதாகும். தவிர அதை வெளியேற்றுவது இயற்கையாகையால் இம்மருந்துகள் வெளியேறவொட்டாமல்செய்யும்பொழுது இயற்கையையும் பாதிக்கின்றது. மருந்துகள் வியாதியை விலக்காமல் வியாதியை உள்ளேவைத்து சம்ரக்ஷிக்கும் குணமுடையவையாகின்றன. வியாதியை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று நாம் நினைத்துக்கொண்டே அறியாத்தனத்தால் மருந்துகளை உபயோகித்து வியாதிகளையும் உடம்பில் இருத்திக்கொள்ளுவதுடன் சரீரத்தின் இயற்கை சக்தியையும் கெடுத்துக் கொள்ளுகின்றோம். இம்மருந்துகளால் வியாதி தணிவதாக தற்காலம் நமக்கு வெளியில் தோன்றினாலும் உண்மையில் அவ்விதமின்றி வியாதிகள் அடக்கப்பட்டு மருந்து வேகம் தணிந்தவுடன் முன்போல அதேவியாதியோ அல்லது மற்ற வியாதிகளோ தலைகாட்டுகின்றன. மருந்துசாப்பிடுகிறவர்கள் ஆயுள் பரியந்தம் ஏதாவது ஒருவியாதியை அனுபவித்துக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். ஆகையால் மருந்துகளால் வியாதிதணிவதென்பது கிடையாது. உண்மையில் மருந்துகளாலேயே வியாதிகள் பெருகுகின்றன. நோயற்றவாழ்க்கை விரும்புவர்கள் முதலில் விலக்கவேண்டியது மருந்துகளையே அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளாவன— வியாதிகளுக்கு காரணம் தோஷமே. அத்தோஷம் கேவலம் ஆகாரத்தாலேயே உண்டாகின்றது. மனிதன் மனம்போனபடி தாறுமாறாக ஆகாரத்தை உட்கொள்ளுவதாலேயே இத்தோஷம் உண்டாகின்றது. சரீரத்திற்குஏற்றுக்கொள்ளாத ஆகாரங்களை பலாத்காரமாக ஏற்றுக்கொள்ளும்படி கொஞ்சம் கொஞ்சமாக தினம் தினம் நிர்பந்தப்படுத்தி உட்கொள்ளுவதால் இயற்கை வலிகுன்றுகின்றது. மனம்போனபடி பசியுண்டாகாமலிருக்கும்பொழுது மேன்மேலும் ஆகாரத்தை வயிற்றில் திணிப்பதாலும் இந்ததோஷம் உண்டாகின்றது. ஆகையால் வியாதியற்றவர்களும் முதலில் கவனிக்கவேண்டியது ஆகாரம்

நன்றாகபசியெடுக்காமல் எந்த ஆகாரத்தையும் உட்கொள்ளலாகாது. பசியெடுத்தபிறகும் போதிய உணவையே கொள்ளவேண்டும். வியாதியுள்ளவர்கள் ஆகாரத்தால் உண்டாகியதோஷம் விலகி பசிநன்றாக உண்டாகும் வரையில் உபவாசமே செய்யவேண்டும். உபவாசம் இயற்கைக்கு மிகுந்த உதவியளிக்கின்றது. ஸ்வேதம் அதாவது வியர்வை பிடித்தல் ( steam bath ) முதலியவைகள் மயிர்கண்களை நன்றாக விரியச்செய்து வியர்வையை யுண்டுபண்ணுவதால் தோஷத்தை ஜயிக்கும் விஷயத்தில் இயற்கைக்கு மிகுந்த ஒத்தாசை செய்கின்றன. ஆகையால் உபவாசம், ஸ்வேதம், இதுபோன்ற சிலகாரியங்களால் நாம் இயற்கைக்கு ஒத்தாசை செய்தால் வியாதி பூரணமாகவிலகிவிடும். இதற்குத்தான் ( nature cure ) அதாவது இயற்கை சிகித்சை எனப்பெயர்.

இதுவே டாக்டர் கூனியவர்களின் மதம். வெளிதேசங்களிலும் நம்தேசத்தில் சிலபாகங்களிலும் இந்தமதம் சில ஜனங்களின் கவனத்தை கவர்ந்துவருகின்றது. நம் சுதேசவைத்தியநூல்களின் ஓர் திவிலையை மேருவாக்கி இம்மதம் வெளிவந்திருக்கிறது. அதாவது எல்லாவியாதிகளுக்கும் காரணம் ஒன்று என்றும் அது ஆகாரதோஷத்தால் ஏற்படுகிறதென்பதும் கூனியவர்களின் இந்த மூலக்கொள்கையானது சுதேசநூல்களிலிருந்து கடன்வாங்கப்பட்டவிஷயம்.

“ஸர்வேஷாமபிரோகாணாம் நிதானம் குபிதாமலா:
தத் ப்ரகோபஸ்யதுப் ரோக்தம் விவிதாஹித சேவநம்”

“உலகத்தில் உண்டாகும் எல்லாவியாதிகளுக்கும் காரணம் திரிதோஷங்களே. திரிதோஷங்கள் நிலைகெட்டே வியாதிகள் உண்டாகின்றன. வியாதிகள் பலபெயர்களை வகித்தாலும் அவைகளுக்கு மூலகாரணம் ஒன்றே. அதுதிரிதோஷம். திரிதோஷம் நிலைகெடுவதற்கு காரணம் இயற்கைக்கு ஒவ்வாத ஆகாரம் முதலியவைகளே” என்று நம் சுதேசநூல்கள் கூறுகின்றன. டாக்டர் அவர்களின் அபிப்பிராயத்திற்கும் நம்சுதேச கொள்கைகளுக்கும் வித்தியாசம் யாதெனில் வியாதிகளுக்கு காரணம் ஒன்று என்று டாக்டர் சொல்லுகிறார். மூன்று என்று நம்நூல்கள் கூறுகின்றன. “தோஷங்களாலேயே எல்லாவியாதிகளும் உண்டாவதால் காரணம் ஒன்று எனவும் சொல்லக்கூடும்.” என்று சுதேச நூல்களில் சிலவசனங்கள் இருக்கின்றன. இந்தவசனங்களைக்கொண்டே ஜர்மன் டாக்டரான கூனியவர்களும் தம்மதத்தை சமீபத்தில் ஏற்படுத்தியிருப்பதாகவே சுதேச நூல்களை படித்தவர் நினைப்பார்கள். அவர் சொல்லும் சிகித்சாமுறையும் நமக்குப்புதியதல்ல.



# உபவாஸம்.

இவர்சொல்லும் ஆகாரநியமங்களும் உபவாஸமும் நம்சுதேச வைத்தியர்களுக்கும் நம் சுதேசிகளுக்கும் புதிதல்ல.

“அனாத்மவந்த பசுவத் புஞ்ஜதேயே அப்ரமாணத:
ரோகாநீகஸ்யதேமூலம் அஜீர்ணம் ப்ராப்னுவந்திஹி”

“மனிதர்கள் தன் சரீரக்கூறை கவனியாமல் ஒவ்வாத ஆகாரங்களையும் உட்கொள்ளுவதாலும் அமிதமாகத் தின்பதாலும் இவர்களை மிருகங்களுக்கு ஒப்பிடலாம். ஈசன் அளித்த விவேகத்தை உபயோகிக்காமல் நாக்கின் சாபல்யத்திற்கு ஆளாகி தகாதஉணவுகளையும் அமிதமாகவும் உட்கொள்வதாலேயே எல்லாவியாதிகளுக்கும் காரணமான அஜீர்ணம் உண்டாகின்றது. அதற்கு ஆமம் என்றுபெயர். இந்த ஆமத்தால் திரிதோஷங்கள் நிலைமாறி ஆமத்துடன் கலந்து எல்லாவியாதிகளையும் உண்டுபண்ணுகின்றன.” டாக்டர் அவர்கள் சொல்லும் ஆகார நியமம் நமது நாட்டிற்கு புதிதல்லவென்பதும் நம்மிடமிருந்தே எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயமாக இருக்கக்கூடுமென்றும் இந்த வசனங்களால் அறியலாம். இவர்சொல்லும் உபவாசமும் நமக்குப்புதிதல்ல. எந்தவியாதியிலும் பத்தியம்வைக்காமல் மருந்துகொடுப்பதில்லையென்பது நமது நாட்டார்களுக்கு நன்குதெரிந்த விஷயம். இதுகாரணம்பற்றியே பத்தியம் கடினமல்லாத ஆங்கிலவைத்தியத்தில் ஜனங்களுக்கு உத்சாகம் மிகுந்திருந்தது. உப்பில்லாத பத்தியம், புளியில்லாதபத்தியம், சுத்தகஞ்சி இதுபோன்ற பலபத்தியவகைகள் நம்பெரியோர்களாலேயே முதலில்கண்டு பிடிக்கப்பட்டு நாளதுவரை அனுபவத்திலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

“விநாபி பேஷஜைர்வ்யாதி: ஸ்வயமேவ நிவர்த்ததே
நதுபத்திய விஹீநஸ்ய பேஷஜாநாம் சதைரபி”

“ஒருவிதமருந்துமில்லாமல் பொதுவில் வியாதிகள் தானாகவே விலகலாம். ஆனால் பத்தியத்துடன்இருக்கவேண்டும். மருந்தில்லாவிட்டாலும் பத்தியத்தை மிகுந்த ஜாக்கிரதையுடன் அனுஷ்டித்தால் வியாதி தானாகவிலகலாம். கோடிக்கணக்காக மருந்தை சாப்பிட்டாலும் பத்தியத்தை அலக்ஷியம்செய்தால் வியாதி விலகாது.” என்று நமது பெரியோர்கள் கூறியதைவிட டாக்டர் அவர்கள் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. பத்தியம் இல்லாவிட்டால் மருந்து [illegible] பிடிக்காதென்று இன்னும் நமது சுதேச வைத்தியர்கள் கர்ஜிப்பதை யாரும் அனுபவத்தில் காணலாம்.

## steam bath ஸ்வேதம் அல்லது வேதுபிடித்தல்

இந்தவேது பிடித்தல் என்று தமிழ்பாஷையில் வழங்குவதே ஸ்வேதமென வடமொழியில்சொல்லப்படுகின்றது. இதை ஆங்கிலத்தில் ஸ்டீம் பாத்என அழைக்கின்றனர். இந்த உண்மையறியாத சிலர் ஸ்டீம் என்றால் வியர்வை என்றும் பாத் என்றால் ஸ்நானம் என்றும் அர்த்தம்செய்துகொண்டு வியர்வை ஸ்நாநம் எனபுதுப்பெயர் இட்டிருக்கின்றனர். இதைவிட ஆவிஸ்நாநம் என்று சொன்னால் சற்று காதுக்கு இனிமையாகவாவது இருக்கும். மயிர்க்கண்களை விரியச்செய்து சரீரத்திலுள்ள அசுத்த அம்சங்களை வெளியேற்ற இம்முறை நமது நூல்களில் பலவிதமாக இந்த ஸ்வேதம் அல்லது வேது பிடித்தல் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றுள் நான்குவிதங்கள் பிரதானங்கள். அவையாவன:—

"ஸ்வேத: தாபோபநா ஹோஷ்மதிரவ பேதாத் சதுர்வித"

தாபம், உபநாஹம், உஷ்ம, திரவம், என நான்கு ஸ்வேதங்கள். இவற்றில் ஊஷ்மஸ்வேம் என்பது steam bath ஊஷ்ம என்றவடமொழி பதத்துக்கு ஆவி யென்று தமிழிலும் steam என்று ஆங்கிலத்திலும் சரியான பிரதிபதங்கள். எந்தெந்தவியாதிகளில் இந்தஸ்வேதங்கள் உபயோகிக்கலாம் என்பதைப்பற்றி விரிவாக சுதேச நூல்கள் கூறுகின்றன. (இவற்றின் விபரம் பிந்தி வைத்திய சாரத்தில் வெளியாகும்) நொச்சித்தழை முதலியவஸ்துக்களைப்போட்டு ஜலத்தைக் கொதிக்கவைத்து அந்த ஆவியால் சுதேசவைத்தியர்கள் வேதுபிடித்து வருவதை இப்பொழுதும் காணலாம். ஆகவே இதுவும் நமக்கு புதிதல்ல. cold bath அல்லது குளிர்ந்த ஜலத்தில் சரீரம் அல்லது அவயவங்களை நனைப்பதுபோன்ற முறைகளும் நமக்குசிறப்பை விளைவிக்கின்றன. விடியற்காலத்தில் குளிர்ந்தஜலத்தில் ஸ்நாநம் செய்வதையே ஆசாரத்தில் ஓர் அம்சமாகக்கொண்ட நமது இந்தியர்களுக்கு இது ஒரு உபதேசமாகாது.

### மருந்து

கூனியவர்கள் சொல்லும் விஷயங்களனைத்தும் நமது நூல்களின் ஓர் கிளையென்று சொன்னோம். அவர் மருந்தின் விஷயமாகச்சொல்லும் குணதோஷங்களை ஆராய்வோம். மருந்து கூடாதென்பதற்கு அவர்சொல்லும் காரணங்களை நாம் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுகிறோம். அவருக்கு கிடைத்தமருந்துகள் முழுவதும் ஆங்கிலமருந்துகளே. அவைகளின் அனுபவத்தை வைத்துக்கொண்டே அவர் மருந்துகளை வெறுத்திருக்கிறார். கொய்னா முதலிய மருந்துகள்



இயற்கைவேலையை அடக்கி வியாதிகளை அறவே ஒழிக்காமல் சில அம்சங்களை சரீரத்திற்குள்ளேயே தங்கும்படி செய்வதாகவும் அது ஒருகாலத்தில் தலைகிளம்பி மறுபடியும் வியாதியாகவருவதாகவும் அவர் சொல்லுவதின் சாரம். நம்தேசநூல்கள் சொல்லுவதாவது:—

"தோஷா: கதாசித்குப்யந்தி ஜிதா லங்கந பாசநை:
யேதுஸம்சோதநை: சுத்தா: நதேஷாம் புநருத்பவ:"

"திரிதோஷங்களால் வியாதிகள் உண்டாகின்றன. உபவாசம் செய்வதால் வியாதி தணியும். அவ்விதமே சில பாசனமருந்துகள் தீபன மருந்துகள் முதலியமருந்துகளாலும் வியாதி தணியும். ஆனால் இந்த உபவாஸம் முதலியவைகளால் வியாதிதணிகின்றதே யொழிய திரும்பி வாராதபடி நிச்சேஷமாக தணிந்துவிடும் என்று நம்பமுடியாது. வியாதி சரீரத்தில் பதுங்கியிருக்கும். பிறகு கிரமமாக பலம்பெற்று மறுபடியும் தலைகாட்டும். ஆனால் நிச்சயமாக ஒவ்வொருவியாதியும் இக்குணமுள்ளதென்று சொல்லமுடியாது. சிலசமயங்களில் உபவாசம் முதலியவைகளால் நிச்சேஷமாகவும் தணியலாம். தணியாமலுமிருக்கலாம். ஆனால் சோதன மருந்துகளால் (இதன்விபரம் வைத்தியசாரத்தில் பார்க்கவும்.) ஒவ்வொருவியாதிக்கும் சிகித்சை செய்தால் அவ்வியாதி சரீரமுள்ளவரை திரும்பிவராது." ஆனால் உபவாசம், மருந்துகள், சோதனமருந்துகள் இவைகளை சமயம்பார்த்து தக்கபடி உபயோகித்தால் ஒவ்வொன்றும் வியாதியை அறவே ஒழிக்கக்கூடிய யோக்யதையுள்ளவைகளே.

"தத்ரால்பே லங்கனம் பத்யம் மத்யே லங்கனபாசனம்
ப்ரபூதே சோதனம் தத்தி மூலாதுன்மூலயேத் மலாந்"

"வியாதி அல்பபலமுள்ளதாகவிருந்தால் லங்கனமென்ற உபவாஸமே பூரணமாக வியாதியை விலக்கும். வியாதிநடுத்தரமான பலமுள்ளதாகவிருந்தால் லங்கனமென்ற உபவாஸமும் பாசனதீபந மருந்துகளும் சேர்ந்து போதுமானவைகளாகும். வியாதி பூர்ணபலம் பெற்றிருந்தால் அப்பொழுது உபவாஸம் முதலியவைகளால் தற்கால சாந்தியாக வியாதி தணியுமேயொழிய பூர்ணமாக நிவர்த்தியாகாது. சோதனமருந்துகளை உபயோகித்தால் வியாதிகளை நிர்மூலமாக்கும்." என்று நமது பெரியோர்கள் ஒவ்வொரு சிகித்சையினுடைய யோக்கியதையையும் நன்றாக நிறுத்தே கூறியிருக்கின்றனர். ஆகையால் வியாதி உள்ளடங்கி பிறகு திரும்பிக்கொள்ளுவதென்ற தோஷம் சோதனமருந்துகள் நீங்கலாக மற்றெல்லாவித உபவாசம் முதலிய சிகித்சைகளுக்கு உண்டென்று நம் நூல்களும் கூறுகின்றன. அனு

பலத்திலும் அறிகிறோம். இயற்கைபலத்தை குறைக்கக்கூடிய மருந்துகளை உபயோகிப்பது கூடாதென்றும் ஆனால் சுதேசமருந்துகளில் ஒன்றுகூட அவ்விததுர்குணத்தை படைத்திருக்கவில்லையென்றும் அவ்விததுர்குணமுள்ள மருந்களை சுதேசநூல்கள் விலக்கியிருக்கின்றனவென்றும் ஏற்கனவே பலதடவைசொல்லியிருக்கின்றோம்.

## சிகித்சை அவசியமா?

ஆரம்பத்திலிருந்து நன்கு கவனித்து எவ்விதசிகித்சை செய்தாலும் மரணம் நேர்ந்துவிடுகின்றது. சித்சை ஒன்றும் செய்யாவிட்டாலும்வியாதிதானாக குணமாகின்றது. ஆகையால் சிகித்சை அவசியமல்லவே என்று நாம் முந்திசொல்லியவிதமாக ஓர் சங்கை உதிக்கலாம். இதற்கு அஷ்டாங்க ஹிருதயம் கடைசி அத்யாயத்தில் விவரமாக சொல்லப்பட்ட சமாதானத்தை சுருக்கி கூறுகிறோம். " உலகத்தில் வியாதிகள் பலவிதமாகவிருக்கின்றன சிலவியாதிகள் மருந்து பத்தியம் ஒன்றும் உபயோகிக்காமலே சௌக்யமாகின்றன. இது பிரத்யக்ஷம் இதைக்கொண்டே எல்லாவியாதிகளுக்கும் மருந்து வேண்டியதில்லையென்று நினைப்பதுபேதமை. மருந்து கொடாமலே இயற்கையிலேயே சிலவியாதிகள் குணப்படுவதுபோல மருந்துகொடுத்தே சௌக்கியமாக வேண்டியவியாதிகளும் பலஇருக்கின்றன. உதாஹரணமாக ரோஹிணிகா என்ற ஓர்வித தொண்டை நோய் (இதன்விபரம் வைத்தியசாரத்தில் வெளிவரும்) மருந்து உபயோகித்தே சௌக்கியமாகின்றது இதுபோன்ற பலநோய்கள் ஔஷதஸேவநத்தாலேயே குணப்படுகின்றன. இவ்வியாதிகளில் இயற்கையைநம்பியிருந்தால் நோயாளி இறப்பது நிச்சயம். ஆகையால் தான் நமது முன்னோர்கள் சிகித்சாசாஸ்திரத்தை விஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர். ஔஷதமில்லாமலே எல்லாவியாதிகளும் சௌக்கியமாகுமென்று இருக்கும்பக்ஷத்தில் நமதுபெரியோர்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு கிரந்தங்கள் எழுதியிருக்கவும் மாட்டார்கள். மருந்துகளாலேயே குணப்படவேண்டிய வியாதிகளைமாத்ரம் விஸ்தரித்து மற்றவியாதிகளுக்கு மருந்து எழுதாமல் இருக்கக்கூடாதாவென கேழ்க்கலாம். அது உண்மையே ஆனால் மருந்தில்லாமல் தானாகவே சௌக்கியமாகக்கூடிய வியாதிகளுக்கும் மருந்தை உபயோகித்தால் சீக்கிரம் வியாதி விலகிவிடுவதால் அவற்றிற்கும் சேர்த்து மருந்து சொல்லப்பட்டிருக்கின்றது. அனாவசியமாக ஒரு நிமிஷம்கூட வியாதியை அனுபவிக்கவேண்டியதுநியாயமல்ல. ஆனதுபற்றியும் சிறியவியாதிகளுக்கும்மருந்துசொல்லப்பட்டிருக்கின்றது. தானா



கவே சௌக்கியமாகும் என்று வியாதிகளை நிதானித்து அறிவதும் எல்லாருக்கும் சுலபமல்ல." இவ்விதம் நமது முன்னோர்கள் கூறியிருப்பதால் சிகித்சையின் அவசியத்தைப்பற்றி நாம் அதிகம் கூறத்தேவையில்லை. இதை அனுசரித்தே நமது வைத்தியர்களும் இலேசான வியாதிகளில் மருந்துகளைக்கொடுக்காமலே பத்தியம் முதலியவைகளை மாத்திரம் உபயோகித்து வருகிறார்கள் ஆகையால் நமது சுதேசமுறைகளை நன்றாக குருமுகமாகப்படித்து அனுபவமும் பெற்றவர்கள் யாதொருகுற்றமும் கூறத்துணியார்கள். பிறகு ஒருதடவை இதைப்பற்றி ஆராய்வோம்.

## உபவாசம்

எங்குகண்டாலும் உபவாஸம் உபவாஸம் என்ற பேச்சே மும்மரமாக காதில் விழுகின்றது. இதன் தத்வம் என்ன. உபவாஸம் என்றால் பட்டினிகிடத்தல் எனப்பொருள். இதையனுஷ்டித்தால் வியாதியை வரவொட்டாமலே தடுக்கக்கூடுமா அல்லது வந்தவியாதியை நசிக்கக்கூடுமா. இதை அனுஷ்டிப்பதால் சரீரத்திற்குண்டாகும் குணம் என்ன? மகாத்மாகாந்தியவர்கள் பல நாட்கள் பட்டினியிருந்திருக்கிறார். அதனால் மிகுந்த நன்மை விளையவில்லையாவென பலகேழ்விகள் உதிக்கின்றன. ஆகையால் உபவாசத்தால் சரீரத்தில்எவ்விதநன்மை ஏற்படுகிறதென்பதை ஆராய்வோம். பிரதிதினம் நமதுசரீரத்தில் பலவிதத்தால் உண்டாகும் சக்திநஷ்டத்தை ஈடுசெய்யவே நாம்ஆகாரத்தை உட்கொள்ளுகிறோம். புஷ்டியான ஆகாரம் ஜீர்ணமாகி அதன் சத்து ரக்தமாகமாறி ரக்தத்தில்கலந்து ரஸம், ரக்தம், மாம்சம் இவை முதலிய ஸப்ததாதுக்களுக்கும் போஷணையை உண்டுபண்ணுவதன் மூலமாக பிரதிதினம் அவைகளில் ஏற்படும் கழிவுபாகத்தை ஈடுசெய்கின்றது. இது ஆரோக்யதசையிலும் பெரும்பாலும் வியாதிகாலங்களிலும் துல்யமாகவே நடைபெறுகின்றது. சரீரத்தில்உண்டாகும் கழிவுகளையும் குறைவுகளையும் பசி, தாகம் முதலிய அடையாளங்களால் அறிகிறோம். அவைகளை ஈடுசெய்ய இயற்கை தூண்டுகிறது. அந்த இயற்கை சக்தியை பலாத்காரமாக நாம் அடக்கப்பார்த்தால் அப்பொழுது இயற்கை சிலகாலம் போராடி கடைசியாக வலிமையிழந்துவிடுகின்றது. நஷ்டம் ஈடுசெய்யப்படாததால் சரீரத்தில் இயற்கைத்தொழிலும் பாதிக்கப்பட்டு கடைசியாக சரீரமும் பாதிக்கப்படுகின்றது. ஆகையால் ஆரோக்யகாலத்தில் இயற்கை தூண்டுதலை நாம் எதிர்த்து அடக்குவது நமது சரீரத்தையே அழிக்கும் பாவச்செய்கையாகும். வியாதிகாலங்களில் வியாதியின் சுபாவத்தால் கழிவுகளில் தடை ஏற்

படுதலால் ஈடுசெய்யும்படி இயற்கை தூண்ட தாமதித்தால் அது வரையில் பொருத்திருப்பது நலமே. இயற்கை நஷ்ட ஈட்டைஎதிர் பாராதகாலத்தில் நாம் ஆகாரத்தைதிணித்தால் ஏற்கனவே வியாதியுடன் போராடும் இயற்கைக்கு பலஹானியைச் செய்தவர்களாவோம். இதற்குக்காரணம்:—

“ ஆமஸக்கோநலோ நாலம் பக்தும் தோ ஷௌஷதாசநம்”

“ஏற்கனவே ஆமத்தால் மெலிந்த அநாவது ஆமத்தை ஜயிக்க முடியாமல் வியாதிகாலங்களில் அக்கினிதத்தளிப்பதால் அவ்வக்கினிமறுபடியும் உட்கொள்ளும் ஆகாரங்களை ஜீர்ணம்செய்ய சக்தியற்றதாகின்றது.” என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் வியாதிகாலங்களில் மிதமாகச்செய்யும் உபவாஸம் இயற்கை வியாதியை ஜயிக்கும் காலத்தில் பிரதிபந்தம் செய்யாமல் இருக்கின்றது. இதுமாத்திரத்தால் உபவாஸம் வியாதியை ஜயிப்பதாக சொல்லப்படுகின்றது. ஆரோக்யகாலத்திலும் வியாதிகாலத்திலும் அளவுகடந்த உபவாஸம் மகாவியாதிகளையே யுண்டுபண்ணும். அதிலும் லௌகிக முறைகளை பின்பற்றியவர்கள் அனுவசியமாக உபவாஸம் இருப்பது முற்றிலும் அனியாயமே.

“ போஜனம் ஹீநமாத்ரம்து நபலோ பசயௌஜஸே
ஸர்வேஷாம் வாதரோகாணாம் ஹேதுதாம் சம்பத்யதே

“ ஒருமனிதன் வேண்டியவளவு ஆகாரத்தை யுட்கொள்ளாமல் குறைவாக உட்கொண்டால் சரீரபலம் மனோபலம் அபிவிருத்தி இவைகள் குறைந்து போவதுடன் கடினமையான பல வாதவியாதிகளுக்கும் உள்ளாக நேரிடும்.” என்று சொல்லியிருப்பதால் ஒவ்வொருவரும் தனக்கு போதிய ஆகாரத்தை உட்கொள்ளவேண்டியதே விதி. இந்தவிதியை எல்லோரும் அனுசரிப்பது அசாத்தியமாதலால் அதற்காக குறிப்பிட்ட சில விசேஷதினங்களில் ஒருவேளை அல்லது இருவேளை அவரவர்களின் சக்திக்குத்தக்கபடி உபவாஸம் செய்ய நமது சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன. உலகத்தை வெறுத்த துறவிகள் அல்லது ஆத்யாத்மிக முறைகளைப் பின்பற்றியவர்களுக்கு இந்திரியங்களை ஒடுக்கி மனதை ஓர் வழிப்படுத்த சில விசேஷித்த உபவாஸங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அது அவர்களுக்கு மாத்திரமே பொருந்தும். உபவாஸத்தாலேயே வியாதியை வரவொட்டாமல் செய்யலாமென்றும் அல்லது வந்தவியாதியைக் குணித்துவிடலாமென்றும் நினைப்பவர்களும் இந்தியாவில்சோற்றுக்கில்லாமல் பட்டினிகிடந்தும்பலவகையும் வியாதிகளால் கஷ்டப்பட்டு வீதியில் தவிக்கும் பலஏழைகளைப்பார்த்

21052
சென்னை-600 093.



தால் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்வார்களென்றே நினைக்கின்றோம். உபவாஸவிஷயத்தில் மகாத்மா காந்தியவர்களை நிதர்சனமாக கூறுவது நகைப்புக்கிடமே. தான் அனுஷ்டிக்கும் உபவாஸத்தை யாரும் பின்பற்றக்கூடாதென்றுகூட சிலசமயங்களில் வியக்தமாகக் கூறியுள்ளார். லௌகிக முறையில் அவர் உபவாஸத்தால் நன்மையடைந்து விட்டதாக நினைக்கமுடியாது. ஆகாரக்குறைவால் உண்டாகும் பலவியாதிகளுக்கு அவர் இலக்கானார். சரீரபலம் மிகவும் தளர்ந்து விட்டதென்பது எல்லாரும் நேரில் அறிந்த உண்மை. கடைசியாக அவர் செய்த சிறைவாசத்தில் கடுமையான ஓர் வாதநோய்க்குள்ளானார். சஸ்திர வைத்தியமில்லாது உயிர்தப்பமுடியாதென்பதையும் உணர்ந்து வைத்தியர்களின் ஆக்ஞைப்படியே நடந்துகொண்டார். அதுகாரணத்தாலேயே அவர் இன்னும் உயிருடன் வாழமுடிந்தது. கடைசியாக சிலமாதங்களுக்குமுன்னும் சிலநாட்கள் உபவாஸம் இருந்தார். ஆனால் மலேரியா வியாதி அவர் உபவாஸத்தை லக்ஷியம் செய்யாமல் அவரை அணுகிவிட்டது. சிலநாள்மருந்துண்ண மறுத்தார். கடைசியாக கொய்னா இஞ்ஜக்ஷன்பெற்றார். வியாதியும் விலகிற்று. பாரமார்த்திக முறைக்காகவே உபவாஸம் முதலியவைகளை அனுஷ்டிப்பதாக அவர் பலதடவையும் சொல்லியுள்ளார். நாம் அதைப் பின்பற்றுவதென்பது அசாத்தியமே. மார்ச்-மீ 1-உ சுதேசமித்திரன் தினப்பதிப்பில் மகாத்மா காந்தியவர்களுடைய வசனங்களின் மொழிபெயர்ப்பில் சில அம்சங்களை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்” நான் ஸத்தியத்தை தரிசிக்க ஆவல்கொண்டு ஆராய்ச்சிசெய்துவருகிறேன் இன்னும் பரிபக்குவம் அடையவில்லை ..............அவன் கொய்னா மருந்து சாப்பிடவேண்டியதில்லை எந்த வியாதியும் அவனுடைய ரத்தத்தில் இடங்கொள்ளமுடியாது. அப்படிப்பட்ட நிலைமையை அடைய நான் பிரயத்தனப்படுகிறேன்.” ஆகையால் பாரமார்த்திக முறையில் சித்திபெற்றவர்களுக்கு வியாதி வராதென்றும் மற்றவர்களுக்கு வியாதிவரக்கூடுமென்றும் அதற்காக அவர்கள் கொய்னா முதலிய மருந்துகள் சாப்பிடுவது அவசியமென்றும் அவர் அபிப்பிராயப்படுவதாகவே நன்றாக விளங்குகின்றது.

## அம்புதொடுக்கின்றது.

சாஞ்சிபுரத்தில் ஸநாதநதர்மம் என்ற பெயருடன் ஓர் தமிழ் மாதபத்திரிகை வெளியாகின்றது. ஸ்ரீமான் யோகி ஸ்ரீவைஷ்ணவதாஸன் அவர்கள் ஆசிரியராக அதை நடத்திவருகிறார். பத்திரிகைக்கு ஸநாதநதர்மம் என்று பெயரிடப்பட்டிருந்தபோதிலும் உலகத்தில் பிரசித்தமான ஸநாதநத்தைப்பற்றி அப்பத்திரிகை போதிப்பதாக தெரியக்

நினைக்கக்கூடாது. ஸ்டீம்பாத் என்ற ஆங்கில வார்த்தையை வியர்வை ஸ்நாநம் என்று அர்த்தம் செய்துகொண்டு அந்த தர்மத்தை பிரசுரம் செய்வதால் பத்திரிகைக்கு ஸ்நாநதர்மம் என்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்வேத சிகித்சைஎன்றும் வேதுபிடித்தல் என்றும் சுதேச வைத்தியர்கள் அனுஷ்டித்துவரும் முறையையே யாருக்கும் விளங்காதவாறு வியர்வைஸ்நாநம்என்று அப்பத்திரிகை புதுப்பெயர் கொடுத்திருக்கின்றது. இதுமாத்திரமல்ல. எனிமாஎன்ற ஆங்கிலமொழிக்கு சுதேச நூல்களில் கூறப்படும் பஸ்தி என்ற வார்த்தையைக்கூட அப்பத்திரிகை வழங்குவதில்லை. வியர்வை ஸ்நாநம், எனிமா, உபவாசம் ஆகிய இவைபோன்றவைகள் சுதேசநூல்களில் விஸ்தாரமாக கூறப்பட்டிருப்பதும் சுதேசவைத்தியர்கள் அடிக்கடி இவைபோன்றவைகளை அனுஷ்டானத்தில் வைத்திருப்பதையும் உலகம் முழுவதும் அறிந்ததே. அஷ்டாங்கஹிருதயம் சூத்ரஸ்தானம் 19-வது அத்யாயம் முழுவதும் பஸ்தி என்ற எனிமாவின் விவரங்களை கூறுகின்றது. அஷ்டாங்கஹிருதயம் 17-வது அத்தியாயம் முழுவதும் ஸ்வேதவிதி அல்லது ஸ்டீம்பாத் (இவராக வைத்துக்கொண்ட வியர்வை ஸ்நாநம்) தைப்பற்றி விவரிக்கின்றது. அஷ்டாங்க ஹிருதயம் 14-வது அத்தியாயத்தில் உபவாசம் அல்லது லங்கனத்தைப்பற்றி விவரம் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே சுதேசநூல்களிலிருந்து இந்த அம்சங்களை மாத்திரம் கைகொண்டு ஜர்மன்டாக்டர் கூனியவர்கள் ஓர் மதத்தை ஏற்படுத்தினார். அதை அனுசரித்தும் மகாத்மாகாந்தியவர்களின் மதமென்று சொல்லிக்கொண்டும் முன்சொல்லிய மூன்று விஷயங்களை ஸ்நாநதர்மம் வற்புறுத்திவருகின்றது. இப்பத்திரிகை இதுவரையில் வைத்தியர்களையும் வைத்தியநூல்களையும் திட்டிக்கொண்டு வந்து கடைசியாக சந்திரிகையின் பேரில் மெதுவாக அம்புதொடுக்க தலைப்பட்டிருக்கிறது. மேற்படி பத்திரிகையின் 8-வது இதழில் அடியில் வருமாறு காணப்படுகின்றது.

(வைத்தியசந்திரிகாமுதல் சஞ்சிகையில் டாக்டர் கோமன் அவர்களின் ரிபோர்ட்டை மொழிபெயர்த்துவிட்டு) “ இவ்விதமாக வைத்தியசந்திரிகா பிரசுரித்து இதற்கு விடையாக சில சமாதானங்களை கூறியிருக்கின்றது. நமக்கு பீச்சாங்குழல் ஊசி கத்தி மருந்து வைத்தியர்களும், மருந்து வைத்தியர்களும் நேயர்களாயிருப்பதால் அவர்களுடைய அக்கரையில் இந்தசமாதானத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டியதாகின்றது. தவிர நம்மை சிலர் வினவவும் செய்கிறார்கள். மேலும் மகாத்மா காந்தியடிகளும் டாக்டர் கோமன் அபிப்பிராயத்தை அனுசரித்தே ஆயுர்வேத மருந்துவைத்திய அனுஷ்டானங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்.



வைத்தியசந்திரிகா கூறும் முதலாவது சமாதானம்—ஆயுர்வேத மருந்து நூல்களெல்லாம் வடமொழியில் உள்ளது. அதிலுள்ள விஷயங்களை ஆங்கில மொழிபெயர்ப்பைக்கொண்டும் மலையாள மொழிபெயர்ப்பைக்கொண்டும் அறிந்ததாக டாக்டர் கோமன் சொல்லுகிறார். மொழிபெயர்ப்பைக்கொண்டு [illegible]ள்ள விஷயங்களை சரியாக அறியமுடியாது என்[illegible]து வைத்தியசந்திரிகாவின் முதல் சமாதானம். இதை (நாம்) ஏற்றுக்கொண்டு திருப்தியடைய மனம் இடம்தரவில்லை. அடியில் கண்ட வினாக்கள் மனதில் உண்டாகின்றன.

(1) டாக்டர் கோமன் அவர்களின் அறிக்கை ஆங்கிலபாஷையிலுள்ளது. அதன் சாரத்தின் மொழிபெயர்ப்பைக்கொண்டு தமிழ்நாட்டார் அவ்வறிக்கையின் கண்டுகொள்ளமுடியாதென்றால் அதன் சாரபாகத்தை மாத்திரம் தமிழில் பிரசுரித்து அதற்கு சமாதானம் எழுதுவது எப்படி பொருந்தும்.

(2) வடமொழியில் உள்ள நூல்களின் அர்த்தத்தை தமிழில் பிரசுரித்துவரும் வைத்தியசந்திரிகாவின் வியாசங்களைப்படிப்பதால் வடமொழியில் உள்ளதை அறியமுடியாது என்று சொல்வதுபோல் ஆகாதா.

இதற்கு விடைகிடைத்தவுடன் மற்றசமாதானங்களைப்பற்றி எழுதுவோம்.”

‘இவ்விதம் ஸ்நாநதர்மம் வினவுகின்றது. இதைப்போன்ற கேள்விகளுக்கு பதில் கூறுவதாக நாம் உத்தேசிக்காவிட்டாலும் பதில் கூறும்படி கட்டாயப்படுத்துவதால் மனதில்லாமலே சமாதானம் சொல்லவேண்டியதாகின்றது. வைத்தியசந்திரிகாவின் ஒவ்வொரு எழுத்தும் உபயோகமுள்ளதாக விருக்கவேண்டுமென்று விரும்புவதால் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சந்திரிகை இனி இறங்காது.

முதல் கேள்விக்கு விடை—அந்த வியாசம் முழுவதும் படித்தால் அடியில்கண்ட விஷயம் சுலபமாக யாருக்கும் தோன்றும். ஒரு முறையில் குணதோஷங்களை ஆராயப்புகுமின் அந்தபாஷையில் பூர்ணபாண்டித்யம் இருக்கவேண்டும். நாடகம் முதலியவைகளை ஆராய்வதுபோலன்றி ஒரு புதிய சாஸ்திரத்தை ஆராயப்படும்பொழுது அதில் சாமர்த்தியம் வாய்ந்த ஓர் ஆசானிடம் கற்றே தீரவேண்டும். பி. ஏ. என்கிற பதவிகிடைத்தபிறகு பலவருஷம் படித்தே ஆங்கில வைத்தியர்கள் ஆகமுடிகின்றதேயொழிய ஆங்கில பாஷையில் சாமர்

த்தியம் பெற்றதால் மாத்திரம் ஆங்கிலவைத்தியநூல்கள் விளங்குமென்று யாவரும் ஒப்புக்கொள்ளவில்லை. மொழிபெயர்ப்புகளால் மூலகிரந்தங்களின் கொள்கை கொலை செய்யப்பட்டுவிடுவதாக பல மேதாவிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். டாக்டர் கோமன் அவர்களே வைத்திய நூல் மொழி பெயர்ப்புகளை வைத்துக்கொண்டு பலஇடங்களில் மோசம்போயிருக்கின்றார். உதாஹரணமாக அவருடைய ரிபோர்ட்டில் முதல்பாகத்தில் 6-வது பக்கத்தில் 16-வது லக்கமிட்ட மூலிகையை விவரிக்கும்பொழுது அந்த மூலிகையை ஆங்கிலத்தில் sida cordifolia என்றும், வடமொழியில் பலா என்றும், மலையாளபாஷையில் குருந்தொட்டியென்றும் தமிழில் மயிர் மாணிக்கமென்றும்சொல்லுகிறார். மயிர்மாணிக்கமென்பது ஜவந்திசெடியின் இலைபோன்ற இலையுள்ள ஓர்கொடி. அதற்குஆங்கிலத்தில் Sida Reetusa என்று பெயர். மலையாளத்தில்குருந்தொட்டி என்று சொல்லப்படுவது தமிழிலும் அதேபெயருடன் வழங்குகின்றது. சுதேசநூல்களில் பரிசயக்குறைவுதான் இந்த தப்பிதத்திற்கு காரணமென்பது சொல்லாமல் விளங்கும். அவருடைய இரண்டாவது ரிபோர்ட்டில் 17-வது பக்கத்தில் 38-வது லக்கமிட்டதில் ஆங்கிலத்தில் lodoicea sey challarum என்றும் தமிழில் கடலரங்கம்பட்டையென்றும் மலையாளத்தில் கடல் தேங்காயென்றும் எழுதியிருக்கிறார். கடலரங்கம்பட்டையென்பது ஓர் செடியின்பட்டை. மூத்திரத்தில் இருக்கும் சர்க்கரையைக் குறைக்கும் குணம் இதற்கிருப்பதாக அகத்தியர் பரிபூர்ணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கடல் தேங்காய் என்பது சமுத்திர கரைகளில் கிடைக்கும் தேங்காய். சாதாரணமாக தேங்காயைப்போலவேயிருக்கும். சமுத்திர ஜலத்தில் நனைந்து ஊறியிருப்பதால் அதற்கு சாதாரண தேங்காயை விட குணத்தில் வேறுபாடு உண்டு. அந்த தேங்காய்க்கு ஆங்கிலத்தில் lodoicea sychallarum என்று பெயர். அதன் குணமாவது. Tonic; Alexipharmics and preservative. In connection with strychnos colubriva (நாகமுஷ்டி) is taken as tonic and febrifuge. என்று குணவாகடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நமது டாக்டர் கடலரங்கம்பட்டையை தவறுதலாக கடல் தேங்காயாக நினைத்து கடலரங்கம்பட்டையை உபயோகிக்கவேண்டிய வியாதிக்கே இதை உபயோகித்து பலன் கிடைக்கவில்லையென்று ரிபோர்ட் செய்திருக்கிறார். மொழிபெயர்ப்பால் டாக்டர் அவர்கள் தடுமாறிவிட்டதற்கு அவருடைய ரிபோர்ட்டில் இன்னும் பல உதாஹரணங்கள் காட்டக்கூடும். விரிவுபற்றி இதோடு நிறுத்துகிறோம்.



2-வது கேழ்விக்கு விடை:— டாக்டர் அவர்களுடைய ரிபோர்ட்டின் மொழிபெயர்ப்பு சாரத்தில் அடங்கியுள்ள சில சாஸ்திரீய பாகம் வைத்தியர்களுக்கு மாத்திரம்தான் புரியும். எல்லாருக்கும் சாஸ்திரபாகம் விளங்குமென்று நாம் எப்பொழுதும் நினைத்ததில்லை. சந்திரிகை வெளியிடும் விஷயங்கள் மொழிபெயர்ப்பல்ல. True translation அதாவது உண்மையான மொழிபெயர்ப்புகளில் வார்த்தைகளை அடக்கி உபயோகிக்கவேண்டியிருப்பதால் மூல கிரந்தங்களின் அபிப்பிராயம் கொலைசெய்யப்பட்டேபோகின்றது. ஆகையால் மொழிபெயர்ப்பில் சந்திரிகை நுழையாமல் கருத்தை விஸ்தாரமாக வெளியிட்டுவருகின்றது. அப்படியிருந்தும் வைத்தியர் அல்லாதவர்களுடைய அபிமானத்தைப் பெருவது மாத்திரம் நமது நோக்கமேயொழிய வைத்தியர் அல்லாதவர்களை இதுமாத்திரத்தால் (குருவிடம் செல்லாது) பண்டிதர்களாக்க உத்தேசமில்லை. வைத்தியர்களுடைய நன்மையையே பிரதானமாக கருதி சந்திரிகை வெளிவருகின்றது. வடமொழி தென்மொழி வைத்தியங்கள் ஒருவழிப்பட்டனவாகையால் ஒன்றையறிந்தவர்கள் மற்றொன்றையும் சிரமமின்றி அறிய முடியும்.

நமது சகோதர பத்திரிகை இந்த சமாதானங்களில் திருப்தியடையுமென்றே நம்புகிறோம். தவிர இதன் ஆசிரியர் மகாத்மாகாந்தியவர்களையும் குருவாகக்கொண்டிருப்பதாக நினைக்கிறோம். மகாத்மா காந்தியவர்கள் ஜயில்வாசம் செய்தசமயத்தில் கத்திகடாரிவைத்தியர்களையும் சமீபத்தில் மலேரியா சுரத்தில் திண்டாடியபொழுது ஊசிகுத்தும் வைத்தியர்களையும் மருந்துவைத்தியர்களையும் அடைந்து அவர்களின் சாமர்த்தியத்தாலேயே நாளதுவரை உயிருடன் இருப்பதால் நமது ஸ்நாநதர்மம் ஆசிரியர் மகாத்மா அவர்களையே இன்னும் குருவாகக்கொள்வதா அல்லது வேறு குருவைத்தேடிக்கொள்வதா என்பதை அவரே நிச்சயிக்குமாறு விட்டுவிடுகிறோம்.

(இனி இப்போர்பட்டவிஷயங்களுக்கு சந்திரிகை இடமளிக்காது—ப. ஸ்.

## வைத்திய உலகம்.

சேலம் முனிசிபல் சபையின் ஆதரவில் நாளதுவருஷம் பிப்ரவரி-மீ 25-உ ஓர் இலவச யூனானி வைத்திய சாலை திறந்துவைக்கப்பட்டது.

கமிஷன்.

ஆயுர்வேதமுறைகளை பரப்புவதற்காக சிலோன் கவர்மெண்டார் ஸ்ரீ மான் பாலசிங்கத்தின் தலைமையில் ஓர் கமிஷனை நியமித்திருப்பதாகவும் அதுவிசாரணை நடத்திவருவதாகவும் தெரிகிறது.

சுதேசவைத்தியசாலைகள்

திருவாங்கூர் அரசாங்கத்தின் ஆதரவில் சென்றவருஷத்தில் பத்து சுதேசவைத்தியசாலைகளை ஸ்தாபித்திருப்பதாகவும் நடப்புவருஷத்தில் புதிதாக பத்து சுதேசவைத்தியசாலை ஏற்படுத்தப்போவதாகவும் தெரிகின்றது.

---

## கோயமுத்தூர் ஜில்லா முதலாவது ஆயுர்வேத கான்பரென்ஸ் உடமலைபேட்டையில்

### 19—2—1926-ல் வைத்யரத்ன ஸ்ரீமான் பரதசாஸ்திரியார்அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்றது.

---

ஷை கான்பரேன்ஸில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. கோயமுத்தூர் ஜில்லாவில் தேசிய வைத்திய சங்கம் ஒன்று ஏற்படுத்தவும் அதற்கு வேண்டிய நிர்வாகசபையோர்களை ஏற்படுத்தவேண்டியது என்றும், அந்நிர்வாகசபையோர்களே இந்த சங்கத்தின் விருத்திக்குவேண்டிய காரியங்களைப் பார்த்துவரவேண்டுமென்றும் இந்த கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபிப்பவர் :— பிரசிடெண்டு.

ஆமோதிப்பவர் — வரவேற்புக்கமிட்டி பிரசிடெண்டு.

போஷகர்கள் :—

1. ஸ்ரீமான் K. வெங்கிடகிருஷ்ணய்யர் அவர்கள், மிராஸ்தார், கொழுமம் (கோயமுத்தூர் ஜில்லா).
2. ,, C. V. வெங்கிட்டரமண அய்யங்கார் அவர்கள் B. A. B. L., M. L. C. கோயமுத்தூர்.
3. ,, ராவ்பஹதூர் T. A. ராமலிங்கம்செட்டியார் அவர்கள் B. A. B. L, M. L C., கோயமுத்தூர்.
4. ,, V. வெரிவாடசெட்டியார் அவர்கள் கோயமுத்தூர்.
5. ,, C. V. வெள்ளியங்கிரிசெட்டியார் அவர்கள் ,,
6. ,, ராவ்பஹதூர் கல்லதம்பி சக்கரை மன்றாடியார் அவர்கள், பட்டகாரர் பழயகோட்டை. (கோயமுத்தூர் ஜில்லா)



7. ,, முத்துராமலிங்கசாளிங்கராயர் அவர்கள், ஜமீன்தார், ஊத்துக்குழி.
8. ,, K. L. ராமசாமிகவுண்டர் அவர்கள், மிராஸ்தார், திருப்பூர்.
9. ,, R. K. ஷண்முகம்செட்டியார்அவர்கள் B. A. B. L., M. L. A. கோயமுத்தூர்.
10. ,, M. சம்பந்தமுதலியார் அவர்கள் B. A. B. L, கோயமுத்தூர்.
11. ,, ராவ்சாஹிப் M. வேணுகோபாலபிள்ளை அவர்கள் B. A. B' L. கோயமுத்தூர்.
12. ,, கன்னிப்பட்டி ராமசாமிக் கவுண்டர் அவர்கள் கோபிசெட்டிபாளையம்.
13. ,, சையத்திவான் காஜாமொய்தீன் சாயபு பஹதூர் அவர்கள் வைஸ்-சேர்மன், உடுமலைப்பேட்டை.
14. ,, C. P. மல்லப்பா அவர்கள் ஜில்லா போர்டு மெம்பர், கொள்ளேகாலம், கோயமுத்தூர் ஜில்லா.
15. ,, அப்துல்கரீம் சாயபு அவர்கள் தாராபுரம்.
16. ,, K. V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட், கோயமுத்தூர்.

அக்கிராசனாதிபதி :—

ஸ்ரீமான் V. C. வெள்ளியங்கிரிகவுண்டர் அவர்கள் M. L. C. மிராஸ்தார் வெள்ளைக்கிணர், கோயமுத்தூர்.

உப அக்கிராசனாதிபதி

ஸ்ரீமான் ராவ்சாகிப் C. S. ரத்னசபாபதி முதலியார் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லா டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டு, கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சில் சேர்மன், கோயமுத்தூர்.

செக்ரட்டரிகள் & கஜான்ஜிகள் :—

ஸ்ரீமான் K. G. ராமநாதசாஸ்திரியார் அவர்கள் தென்தாலூக்காகளுக்கு. அமராவதி ஆயுர்வேத வைத்தியசாலை பொள்ளாச்சி.

,, B. V. ராஜமாணிக்கம் அவர்கள் வடதாலூக்காகளுக்கு. திலிக பார்மஸ் யூடிகல் ஒர்க்ஸ், பவானி.

கமிட்டி மெம்பர்கள்

1. ஸ்ரீமான் திருமலை சாஸ்திரியர் அவர்கள், ஆயுர்வேத பூஷணம், முனிசிபல் ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை, ஈரோடு.
2. ,, B. வெங்கடகிருஷ்ண அய்யங்கார் அவர்கள், ஆயுர்வேதபூஷணம் தாலூக்காபோர்டு ஆயுர்வேத தர்மவைத்தியசாலை சென்னிமலை, (ஈரோடுதாலூக்கா.)
3 ,, அனந்தராமய்யர் அவர்கள் ஆயுர்வேத விசாரத வைத்தியர் முனிசிபல் ஆயுர்வேததர்மவைத்தியசாலை பொள்ளாச்சி.
4. ,, சேஷஅய்யங்கார் அவர்கள், ஆயுர்வேத பூஷணம் முனிசிபல் ஆயுர்வேத தர்மவைத்தியசாலை, கோயமுத்தூர்.
5. ,, A. கிருஷ்ணசாமி சாஸ்திரியார் அவர்கள் பிஷக்வர ஆயுர்வேத வைத்தியர், தாராபுரம்.
6. ,, பத்மனாபராவ் அவர்கள், ஆயுர்வேத பூஷணம் தாலூக்காபோர்டு ஆயுர்வேத தர்மவைத்தியசாலை மதுக்கரை, (கோயமுத்தூர்தாலூக்கா.)
7. ,, மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பிஷக்வா ஆயுர்வேதவைத்தியர், ஈரோடு,
8. , V. R. ஸ்ரீனிவாசராவ் அவர்கள், ஆயுர்வேதவைத்தியர், கோயமுத்தூர்.

2. அகில இந்திய ஆயுர்வேத மகாமண்டலத்திலோ அல்லது கலாசாலையிலோ யோக்கியதாபத்திரம் பெற்றவர்களும் அல்லது தேச பாஷைகளில் நல்ல ஞானத்துடன் ஐந்து வருஷக்களுக்குக் குறையாமல் வைத்தியத்தொழிலையே நடத்துபவர்களாயுமுள்ளவர்களும், **ஆயுர்வேத முறையில் நம்பிக்கையுள்ள அபிமானிகளும்,** இச்சங்கத்தின் அங்கத்தினர்களாகஇருக்கத்தக்கவர்கள் என்றுதீர்மானிக்கப்பட்டது

[பெரிய எழுத்தில் காட்டியது திருத்தபிரேரபணை.]

பிரேரேபிப்பவர் :-பவானி ஸ்ரீமான் B. V. ராஜமாணிக்கம் அவர்கள்
ஆமோதிப்பவர்:- வைத்தியரத்னபிரம்மஸ்ரீ R. பரத சாஸ்திரியார் அவர்கள்.

திருத்தபிரேரபணை பிரேரேபிப்பவர்

ஸ்ரீமான் R. ராஜகோபாலராவ் Journalist.

ஆமோதகர்கள்:- M. S. ரங்காச்சாரியார் அவர்கள் B. A. B. L.
ஸ்ரீமான் வெங்கிடரமணசாஸ்திரியர் அவர்கள் B. A. B. L.



3 கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள டிஸ்ட்ரிக்டு போர்டு, தாலூக்கா போர்டுகள், முனிசிபாலிட்டிகள், யூனியன்களில் நமது தேசிய வைத்திய சாலைகளையும், வைத்திய பாடசாலையை ஏற்படுத்தவும் இதர வைத்தியசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படிக்கும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. இதுவரை ஷையார்கள் செய்த உதவிக்கும் இச்சங்கம் நன்றிபாராட்டுகின்றது.

பிரேரேபிப்பவர் :- ஸ்ரீமான் V. S. சிவசுப்பிரமணிய பிள்ளைஅவர்கள் Retired Tahsildar.
ஆமோதிப்பவர் :- ஸ்ரீமான் ரங்காசாரியார் அவர்கள் B. A. B. L.

---

பவானி(ஈரோடுமார்க்கம்)
10—3—26

B. V. Rajamauickam,
வடதாலூக்கா செக்ரடரி,
கோயமுத்தூர்; தேசிய வைத்தியசங்கம்.

---

# ஆகாரம்.

எட்டாவது சந்திரிகையின் 16-வது பக்கத்தொடர்ச்சி.

என்று சொல்லப்பட்டிருப்பதால் பிரதிதினம் உட்கொள்ளும் ஆகாரங்களில் நெய் அதிகமாக சேர்த்துக்கொள்ளவேண்டும். வியாதிஸ்தர்களுக்கு நோயை யனுசரித்து ஆகாரம் மாற்றப்பட்டாலும் நோயற்றவர்களுக்கு பிரதிதினம் ஆகாரத்தில் வேளை ஒன்று அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரையில் நெய் சேர்க்கப்படவேண்டும். இதைப்பற்றி மாம்சம் உட்கொள்ளுபவர்கள் அதிக அக்கரை கொள்ளாவிட்டாலும் அவர்களல்லாத மற்றவர்கள் கவனிக்கவேண்டியது அவசியம். நெய் மந்தமென்று சிலர் நினைப்பார்கள். அதைப்பற்றி பிறகு விவரிப்போம். இவ்விதம் பசையுள்ள பதார்த்தங்கள் சீக்கிரத்திலும் ஜீரணமாகும். ஜீர்ணகாலத்தில் சிறுகுடல் பெருங்குடல்களில் உண்டாகும் வாயுவை ரக்தக்குழாய்களில் போகவொட்டாமல் தடுத்து வெளியேற்றும். சரீரத்தில் மாமிசம் முதலியவைகளுக்கு புஷ்டியைக்கொடுக்கும். சரீரத்தில் பலத்தைதரும். முகத்தில் ஓர் தேஜஸ்லையும் தோலுக்கு பளபளப்பையும் உண்டுபண்ணும்.

அளவுடன் சாப்பிடவேண்டும்:— அளவுடன் சாப்பிடுவதால் வாதபித்த சிலேஷ்மங்கள் ஒன்றும் கெடாமல் இயற்கை பலத்தைப் பெறுகின்றது. திரிதோஷங்கள் இயற்கை பலம் பெறுவதால் ஆயுளும் நீடிக்கும். குடல்களுக்கு தொந்திரவை விளைவிக்காமல் மலப்

யைக்கு வந்துசேருகின்றது. பித்தப்பைகள் அல்லது பித்தக் குழாய்கள் ஆகிய இவைகளை கெடுப்பதில்லை. தொந்திரவு இல்லாமலும் ஜீர்ணிக்கும்.

ஒரு ஆகாரம் நன்றாக ஜீர்ணமாகியபிறகே மற்றொரு ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும் முதலில் உட்கொண்ட ஆகாரம் நன்றாக ஜீர்ணம் ஆகாதகாலத்தில் மறுபடியும் திணித்த இரண்டாவது ஆகாரம் முதல் ஆகாரத்தில் ஜரிக்காத பாகத்துடன் கலக்கின்றது. எப்பொழுதும் ஆகாரங்கள் குடலில் தங்கியிருக்கவேண்டிய காலத்திற்கு அதிகமாகத் தங்கிவிடுமாகில் அந்த ஆகாரமும் கெட்டுப்போவதுடன் தங்கியிருக்கும் ஸ்தானத்தையும் கெடுத்துவிடுகின்றது. அதேசமயத்தில் மற்றொரு ஆகாரமும் அதனுடன் சேர்ந்தால் இதுவும் கெடுகின்றது. கெட்ட ஆகாரத்தை ஜீர்ணம் செய்ய சக்தியின்றி குடல்களும் அவைகளின் திரவங்களும் பித்தமும் அதனதன் குணத்தை யிழக்கின்றன. திரிதோஷங்கள் இயற்கைக்கு விருத்தமாக பிரகோபத்தையடைகின்றன. அவ்விதமின்றி முதல் ஆகாரம் நன்றாக ஜீர்ணித்துவிட்டால் குடல்கள் சுத்தமாகவும் மற்றொரு ஆகாரத்தை ஏற்றுக்கொள்ளப் போதிய பலமுள்ளவைகளாகவும் இருப்பதால் அவைகள் உற்பத்திசெய்யும் ஜீர்ணகாரி திரவங்களும் உசிதமான பலத்தைப் பெற்றிருப்பதால் மற்றொரு ஆகாரம் விழுந்தவுடன் உடனே அதைக் கெடும்படி விடாமலும் அதை வேண்டிய வளவு ஜீரணித்தும் சரியான காலத்தில் அந்தந்த ஸ்தானங்களுக்குப் போகும்படியும் செய்கின்றது.

விருத்தமான ஆகாரத்தை உட்கொள்ளலாகாது. உட்கொண்ட ஆகாரங்கள் நன்றாக ஜீர்ணமாகி ரத்தத்தில் கலக்கும்போது சரீரத்தில் அவைகள் காட்டும் குணங்களுக்கு வீர்யமெனப்பெயர். ஒவ்வொரு ஆகாரமும் அதாவது வஸ்துக்களில் உள்ள ஒவ்வொரு ருசியும் (தித்திப்பு, புளிப்பு, முதலிய அறுசுவை) சரீரத்தில் ஒவ்வொரு குண தோஷங்களை உண்டுபண்ணுவதாக ஆகின்றது. சில வஸ்துக்கள் சரீரத்தில் உஷ்ணத்தை அதிகப்படுத்துகின்றன. சில சீதத்தை அதிகரிக்கச்செய்கின்றன. இவ்விதம் வஸ்துக்களுக்கு அதனதன் சுவையை அனுசரித்து சரீரத்தில் சில குணங்களை உண்டுபண்ணும்யோக்கியதை இருக்கின்றது. (இதுவே வீர்யம்) வீர்யத்தில் விரோதமில்லாத வஸ்துக்களையே ஒன்றுசேர்த்து உபயோகிக்கவேண்டும். அதாவது சீத குணமுள்ள ஆகாரத்தை யுபயோகித்தால் அதேகுணமுள்ள வஸ்துக்களை சேர்த்து உபயோகிக்கவேண்டும். (தொடரும்)



(4) சன்னிபாதகிரஹணி லக்ஷணம்—முன்சொல்லிய மூன்றை லக்ஷணங்களும் கலந்திருத்தல்.

குறிப்பு—முன்சொன்ன நாலுவகைகளுடன், மற்றும் மூன்று அதிகவிதங்களை சுதேசநூல்கள் கூறுகின்றன. அவற்றின்விபரம் அக்னி, விஷமம், தீக்ஷ்ணம், மந்தம், என மூவகைப்படும்.

விஷமாக்னியாவது—பித்தநீர் அதனதன் ஸ்தானங்களில் உத்பத்தியாகி குழாய்கள்வழியாக கிரஹணி ஸ்தானத்திற்கு வராமல் ரத்தத்துடன் கலந்தேபோய்விடும். அதன் லக்ஷணமாவது—ஒவ்வாத ஆகாரங்களையும் சில சமயங்களில் நன்றாக ஜீரணம் செய்துவிடும். சிலசமயங்களில் பத்தியமான லகுவான ஆகாரங்களையும் ஜீரணம் செய்யாமல் விட்டுவிடும். பித்தம் இயற்கையாகவரும் சமயங்களில் எவ்வித ஆகாரமும் ஜீரணமாவதும் அவ்விதம் வராமல் தடைபடும் சமயத்தில் உசிதமான ஆகாரங்களும் ஜீரணமாகாமலும் போகின்றது. அதற்குக்காரணம் பித்தப்பை சரிவர தன்வேலையைசெய்யாததே. (liver sluggishness) இதையும் ஒரு கிரஹணி வியாதியாக பாவிக்கலாம்.

தீக்ஷ்ணாக்னியாவது— பித்தாசயங்கள் அதிகதுடியாக வேலை செய்வதால் மிகுந்த பித்தத்தை உத்பத்திசெய்து ஆகாரத்துடன் கலக்கச்செய்கின்றன. அதன்லக்ஷணமாவது—தாறுமாறான ஆகாரங்களையும் சீக்கிரமாக ஜீர்ணம்செய்துவிடும்.

மந்தாக்னியாவது—இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், இவைகளில் இயற்கைக்கு அதிகமாக திரவங்கள் உத்பத்தியாகி பித்தஜலத்தின் குணத்தை குறைத்துவிடுதல். பித்தம் அதன் ஆசயத்திலிருந்து வெளியாகும்போதே கபத்தின் மிகுதியால் குணம் குறைவுபட்டே வருதல். அதன் லக்ஷணமாவது—உசிதமான ஆகாரத்தைக்கூட வெகு தாமதமாக ஜீர்ணம்செய்வதுடன் வாய்வரட்சி, வயிற்றுப்பொருமல், குடல்களில் இரைச்சல், உடம்புகனத்தல் ஆகிய துர்குணங்களையும் செய்யும்.

குறிப்பு-இவைகளுக்கு சிகித்சை தனியாகச்சொல்லவேண்டியதில்லை, அஜீர்ணவியாதியில் சொல்லப்பட்டமருந்துகளே இதற்கும் ஏற்றவை. "வாதவ்யாத்யச்மரீ குஷ்டமேஹோதரபகந்தரா: அர்சாம்ஸி கிரஹணீத்யஷ்டௌ மஹாரோகாஸ்ஸுதுஸ்தரா:" வாதவியாதிகள், அச்மரீ என்ற கல்லடைப்பு பெருவியாதி, டயபிடீஸ் என்றமேகவியாதி, மகோதரம், பவுந்தரம், மூலவியாதி, கிரஹணீ, ஆகிய இந்த எட்டு வியாதிகளும் மகாரோகங்கள். இவைகளை பூர்ணமாக குணப்படுத்துவது

மிகவும் கடினம்" அதாவது இவைகள் சௌக்கியமானதாக மேல்பார்வைக்குத்தோன்றும். பிறகு சிலமாதம் அல்லது வருஷம்கழித்து மறுபடியும் தோன்றும். ஆகையால் இவைகளில் குணம் பூர்ணமாகத் தோன்றியபோதிலும் சில மாதம் மிகுந்த ஜாக்கிரதையுடன் பத்தியம் மருந்து இவைகளை கவனிக்கவேண்டும். காய்ச்சல் முதலிய எந்த வியாதியாலும் மனிதன் உயிர்துறப்பது வாஸ்தவமே ஆனல் அவைகள் மகாரோகங்களாக கருதப்படவில்லை. Tuberculosis என்றக்ஷய வியாதியும் மற்ற பிளேக்முதலியவைகளும் மகாரோகங்களாகஅழைக்கப்படவில்லை. இவைகளில்உயிர்துறப்பதுசகஜமாகிலும் எல்லாவியாதிகளுக்குமே அவ்வித குணமிருப்பதுபற்றி அது விசேஷமாக நினைக்கப்படவில்லை. சரீரத்திலேயே பலநாள் மறைந்திருந்து வைத்தியனுக்கும் நோயாளிக்கும் மிகுந்த சிரமம் கொடுப்பதில் முந்திசொல்லிய எட்டுவியாதிகளே முக்கியமானவை. இதில் வாதவியாதி பலவகைகளாகவும் முக்கியமாக எண்பதுவகைகளாகவும் சுதேசநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது ஆங்கிலத்தில் பலபெயர்களுடன் அழைக்கப்படும். Neuralgia Paralysis, facial paralysis tetanus gout Rheumatism, Arthritis, இவ்வியாதிகள் சுதேசமுறைகளில் பொதுவில்வாதவியாதியென்று அழைக்கப்படுகின்றது (இதன்விவரம் வாதவியாதி என்றதலைப்பில் இனிவெளிவரும்) இவ்வியாதிகள் சிலவற்றிற்கு காரணம் நாளதுவரை கண்டுபிடிக்கப்படவுமில்லை. இவைகளுக்கு விஸ்தாரமான சிகிச்சைநமது நூல்களில் சொல்லப்பட்டிருப்பதுடன் நேரில் குணத்தையும் காணலாம் அச்மரி என்பது கல்லடைப்பு இதற்கு Calculi என்று ஆங்கிலப்பெயர். இதுபலவகையாகவிருக்கும். குஷ்டம் என்பது பெருவியாதியென்று வழங்கப்படுகின்றது. இதற்கு ஆங்கிலத்தில் leprosy என்றுபெயர். மேஹம் என்பது நீரிழிவு என்று தென்மொழியிலும் Albuminuria, Bright's Disease, Diabetes என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படுகின்றது. உதரம் என்பது மகோதரமே. இதற்கு ஆங்கிலத்தில் Ascites என சொல்லப்படுகின்றது. பகந்தரம் என்பது தென்மொழியில் பௌத்திரமென்றும் ஆங்கிலத்தில் Fistula Anus என்றும் அழைக்கப்படுகின்றது. அர்சஸ் என்பது தென்மொழியில் மூலவியாதியென்றும் Piles என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படுகின்றது கிரஹணி என்பதைப்பற்றி ஏற்கனவே விவரிக்கப்பட்டிருக்கிறது

எல்லா கிரஹணிகளுக்கும் மதூகாஸவம்—இலுப்பைமரத்தின் உலர்ந்தபுஷ்பம் வீசை $8\frac{1}{3}$, வாய்விளங்கம் வீசை $4\frac{1}{6}$, கொடிவேலிவேர் வீசை $2\frac{1}{12}$, சேங்கொட்டை வீசை 4, மஞ்சிஷ்டி கோசல



32 இவைகளை இடித்துப்போட்டு 96 படி ஜலம் விட்டு 32 படியாக அடுப்பில்வைத்து வற்றவைத்து குளிர்ந்தபிறகு வடிகட்டி தேன் 4 படிவிட்டு ஒருகுடத்தில் வைத்து வாய்மூடி ஒருமாதம் அசையாமல் வைத்திருந்து பிறகு அதை உபயோகிக்கவேண்டும். வேளை ஒன்றுக்கு ஒரு அவுன்சவீதம் தினம் இரண்டுவேளை உபயோகிக்கவும்.

செய்யும் விதம்:— இலுப்பை புஷ்பம் சிலவிடங்களில் கடைகளில் கிடைக்கும். அல்லது புஷ்பத்தை நாமாக தயார்செய்துகொள்ளவேண்டியதே சேராங்கொட்டை கடையில் கிடைக்கும். அதில் உபயோகமில்லாத கொட்டைகளும் கலந்திருப்பதால் நாம் நல்ல கொட்டைகளை பொறுக்கி எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது ஓர் வாயகன்ற பெரிய பாத்திரத்தில் முக்கால்வாசி தண்ணீர் நிறைத்து கொட்டைகளைப்போட்டால் மிதப்பவைகள் சாரமற்றவை. மூழ்கியிருப்பவைகள்தான் மருந்துக்கு உபயோகமானவை. அவைகளை கணக்குப்படி நிறுத்து எடுத்துக்கொள்ளவேண்டும். இது மிகவும் விஷச்சரக்கு அதாவது அந்த கொட்டையின்பால் மேலேபட்டாலும் பட்ட இடம் புண்ணாவதுடன் உடம்புமுழுவதும் வீங்கிவிடும். சிலருக்கு அதன்வாடை பட்டால்கூட வீக்கம் உண்டாகும். அந்தகொட்டைகளை நறுக்கியே கஷாயம் போடவேண்டியிருப்பதால் மிகுந்தஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். ஒரு பாக்குவெட்டியில் ஒவ்வொன்றையும் இரண்டு துண்டாக வெட்டி கஷாயப் பானையில்போடவேண்டும். நன்றாக இடித்து நொறுக்கிவிடவேண்டுமென்ற நிர்பந்தமில்லை. கீழே ஒரு பெரிய காகிதத்தை விரித்து அதில் துண்டித்த கொட்டைகள் விழுமாறு செய்து பத்துகொட்டை அல்லது இருபதுகொட்டைகளை நறுக்கினவுடன் அதை பானையில் போடவும். இவ்விதம் செய்து கடைசியில் அந்த காகிதத்தை நெருப்பில் கொளுத்திவிடவேண்டும். வாய் விளங்கம் என்பது கடைச்சரக்கு இதை நன்றாக உரலில் இடித்து தூளை அந்த பானையில் சேர்த்துவிடவேண்டும். மஞ்சிஷ்டியையும் நொறுக்கி இடித்து தூளை பானையில் போட்டுவிடவும். எல்லா சாமான்களையும் சேர்த்துப்போட பெரியபானை கிடைக்காவிட்டால் இரண்டு அல்லது மூன்று பானைகளில்போடலாம். ஆனால் இரண்டு பானைகளில் கஷாயம் போடுவதானால் மருந்துசாமான் ஒவ்வொன்றையும் இரண்டு இரண்டு பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு பானையில் போடவேண்டும். இவ்விதமே மூன்று பானைகளில் போடுவதானாலும் ஒவ்வொரு மருந்து சரக்கையும் மூன்று பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு பானையிலும் போடவேண்டும். அதற்கு தகுந்தாப்போல ஜலத்தையும் விடவேண்டும். கஷா-

யம் சரியாக வற்றிவிட்டதா என்பதை கவனிக்கவேண்டும். அதற்கு வழி — ஒரு பானையில் கணக்குப்படி மருந்து சரக்குகளைப்போட்டு அதில் ஜலம் விடும்பொழுது கடைசியில் வற்றிய பிறகு இருக்கவேண்டியவளவு ஜலத்தை முதலில் விட்டு ஒரு நீள குச்சியில் அளவு எடுத்து அதை கத்தியால் அடையாளம் செய்துகொண்டு மீதி ஜலத்தையும் விட்டு வற்றவைக்கவும். அடிக்கடி அதை அளவு குச்சியைவிட்டுப்பார்க்கவேண்டும். முன் குறிப்பிட்ட அடையாளத்திற்கு சரியாக நீர் இருப்பதை தெரிந்துகொண்டு உடனே பானையை இறக்கிவைத்துவிடவேணும் ஆறியபிறகு வடிகட்டவேண்டும். உதாஹரணமாக ஒருபானையில் மருந்துசரக்கைப்போட்டு இருபதுபடி ஜலம்விட்டு ஐந்துபடியாக வற்றவைக்கவேண்டுமானால் அப்பொழுது பானையில் மருந்து சரக்கை முதலில்போட்டு பிறகு ஐந்துபடி ஜலம் விட்டு ஓர் நீளகுச்சியால் அதை அளவு எடுத்து அதை அழிந்துபோகாமலிருக்க கத்தியால் நன்றாக அடையாளம் செய்துகொள்ளவேண்டும். பிறகு மீதி பதினைந்துபடி ஜலத்தையும் விட்டு காய்ச்சவேண்டும்: அடையாளக்குச்சியை பானையில் விட்டுப்பார்க்கவேண்டும். அடையாளத்திற்கு சரியாக ஜலம் வற்றியவுடன் அடுப்பை விட்டு இறக்கிவிடவேண்டும். அடுப்பில் எரிச்சலை அதிகம்போட்டால் பானையில் ஆவிநிறைய உண்டாகும். அப்பொழுது குச்சியை விட்டால் குச்சி முழுவதும் ஆவியின் வேகத்தால் நனைந்துவிடும். வற்றவேண்டிய ஜலம் அதிகம் இருப்பதாக ஏமாந்துபோவது உண்டு. ஆகையால் அளவுபார்க்கும்பொழுது அடுப்பைத் தணித்து ஆவி அதிகம் இல்லாமல்செய்து பார்க்கவேண்டும். இந்த மருந்து கிஷாயத்தில் இலுப்பைப்பூ ஜலத்தில் நனைந்து ஊறிக்கொள்வதால் கிஷாயம் வற்றியபிறகு மருந்து சரக்குகளுக்குமேல் ஜலம் நிற்காது. அனேகமாக ஜலமும் மருந்து சரக்குகளும் பிசரியே இருக்கும். ஆகையால் இந்த கிஷாயத்திலும் இதைப்போன்ற கிஷாயங்களிலும் வற்றியபிறகு அளவு எடுக்கும்பொழுது முதலில் வேறொரு குச்சியால் பானையின் நடுவில் மருந்து சரக்குகளை அப்புறப்படுத்தி ஓர்வழி உண்டுபண்ணி பிறகு அளவு குச்சியால் அதேவழியில் அளவைப்பார்த்து நிதானிக்கவேண்டும். இ வே கிஷாயங்களை அளவுகண்டுபிடிக்கும்வழி. வற்றவைத்து ஆறியபிறகு ஓர் பாத்திரத்தில் வடிகட்டவேண்டும். கஷாய சாமான்களை பிடிபிடியாக எடுத்து கையால் பிழிந்துகொள்ளவேண்டும். இந்த சமயத்தில் சேராங்கொட்டை கையில் படுவதால் ஒரு பாதகமும் வராது. பிழியும்பொழுது சேராங்கொட்டையையும் சேர்த்துப் பிழிவதுகடினம். ஆகையால் சேராங்கொட்டைகளை அப்புரப்படுத்திவிட்டு பிழியவேண்டும்.

210152

தமிழ்நாடு கூறுவதின் சுருக்கம்:— சுதேச வைத்திய முறையாகிய ஆயுர்வேதத்தின் நன்மைகளை ஜனங்களுக்குப் புகட்டிப் பரப்புவதற்கும் மற்ற வைத்திய முறையைவிட உண்டான குணாதிசயங்களை எடுத்துக்காட்டவும். இது சாஸ்திரீயமானதல்லவென்றும் ஆராய்ச்சிசெய்து ஏற்பட்டதல்லவென்றும் சொல்லுவோர்க்கு பதில் அளிப்பதற்கும் ஏற்பட்ட ஓர் பத்திரிகை.

குரோதன ௵ ஆவணி-மீ 1-உ

தமிழ்ப் பொழில் கூறுவதின் சுருக்கம்:— வைத்திய சந்திரிகா நமது நாட்டில் நிகழும் தமிழ் மருத்துவமுறை வடமொழி மருத்துவ முறை முதலிய நாட்டு மருத்துவ முறைகளைப் போற்ற முன் வந்திருப்பதாகும். திருவள்ளுவரும் மருந்தும், தமிழ் வைத்தியம் என்ற தலைப்புகள் பத்திராதிபருக்கு தமிழ் மருத்துவத்திலுள்ள அன்பைக்காட்டுகின்றன.

---

வந்தேமாதரம்.

ஸ்ரீ பார்த்தஸகன் அவர்கள் இயற்றிய

## "சத்திய விரதன்"

என்னும் அருமையான தமிழ் நாவல்.

பல நூறு பிரதிகள் விளம்பரமின்றியே தீர்ந்து விட்டன, தமிழ் நாகரீகத்தையே உரைப்பது. கற்பின் திண்மையையும், சத்தியத்தின் மேன்மையையும் செவ்வனே எடுத்துக்கூறுவது. பண்டிதர்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்படுவது.

அபிப்பிராயம்.

**நவசக்தி** எழுதுகிறது:—இந்நூல் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது. கதையை விஸ்தரிக்காமல் சுருக்கமாகவும் அனைவருக்கும் விளங்கும்படியாயும் எழுதப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

**கம்பநாடர்** எழுதுகிறது:— இது சிறிய உருவினதாயிருப்பினும் மிகச் சுவையுடனிருக்கிறது. மற்ற புஸ்தகங்களைப்போல அனாவசியமான அதிக வர்ணனையின்றி எழுதப்பட்டிருக்கிறது.

**வ. வே. சு. ஐயர், சேரமாதேவி** எழுதுகிறார்:— இது தற்காலத்தில் வெளிவரும் மேனாட்டு நாகரீகங்களை மறைத்து நம்நாட்டு நாகரீகம்போலக்காட்டும் போலி நாவல்களைப்போன்ற கதையன்று. கதை துவக்கத்தினின்று முடிவுவரை சுவற்சி நிரம்பியதாயிருக்கிறது

விலை அணா எட்டு. உடனே எழுதுங்கள். சொல்பபிரதிகளே 100-க்கு 40 கமிஷன்.

ஸ்ரீநிவாஸராகவாசாரி.
வேங்கரை P. O., (வயா) புகளூர் S. I. R.

# " வைத்தியசந்திரிகா. "

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும் அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது மாசிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ண பாண்டித்யம் வாய்ந்த நமது ஆசிரியரும், மற்றும்பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழிபெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகிச்சை முதலியவைகளை [illegible] " வைத்தியசந்திரிகா " பிரதி மாதமும் தாங்கிவருவாள். வைத்தியமுறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்க்கு ஒருவைத்திய கலாசாலையைப்போல் நமது " சந்திரிகா " உதவுவாள்.

ஒருகாலத்தில் தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாமலிருந்த நம் நாட்டு சிகிச்சா முறைகளின் பிரயோஜனத்தை எடுத்துக்காட்ட வெளிவரும் நமது பத்திரிகை தமிழ் மக்களின் முழு அனுதாபத்தையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறது.

வியாபாரிகளே! ஏன் நல்ல சரக்கை வைத்துக்கொண்டு தூங்குகிறீர்கள். கடையில் சாமான்களை வைத்திருந்தால் வியாபாரம் விர்த்தியடையாது. உங்களிடம் உயர்ந்த சரக்கு இருப்பதை யார் அறிவார்கள்? தமிழ் நாடுமுழுமையும் இன்னும் தமிழன் வசிக்கும் எல்லா இடங்களுக்கும் செல்லும் "வைத்தியசந்திரிகா" வில் ஓர் முறை விளம்பரம் செய்து பாருங்கள். மேல் நாட்டவரின் வியாபாரமுன்னேற்றத்தின் இரகசியம், அவர்கள் செய்யும் "விளம்பர" மென்பது நம்மவரில் பலருக்கு இன்னும் தெரியாது.

வைத்தியர்களே! உங்கள் மருந்துகள் ஏராளமாய் விற்பனையாக வேண்டுமோ? வைத்திய உலகத்தில் தனக்கு நிகரில்லாத தமிழ் மாசிகை [illegible] இந்த பத்திரிகை மூலை, மூலைக்குமூலையிருக்கும் ஆயுர்வேத, யூனானி வைத்தியசாலைகளையும், வைத்தியர்களின் கைகளையும் அலங்கரிக்கிறது. ஆகையால் ஒருமுறையாவது எங்கள் சந்திரிகையில் விளம்பரம் செய்து பாருங்கள்.

காரியஸ்தர்,
" வைத்திய சந்திரிகா " கரூர்.

**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா :—
உள்நாட்டிற்கு ரூ. 2.
வெளிநாட்டிற்கு ரூ. 3.

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ. 8.
,, ,, -க்கு ரூ. 4.
,, ,, ¼-க்கு ரூ 2.



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |